**கரைதுறைப்பற்று பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**

------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 23 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மே 05 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரைத்துறைப்பற்று பிரதேசசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 90 எண்ணிக்கையான இயந்திர உபகரணங்களின் பெறுமதிகள் 05 வருடங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை

(ஆ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 13 வகையான 84 தளபாட மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் 05 வருடங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 28 வாகனங்களின் பெறுமதிகள் 05 வருடங்களுக்கு மேலாக மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அத்துடன் இவற்றினது உரிமை மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு என்பன தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்க வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 6,983,138 பெறுமதியான 11 மூலதன வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிராது கடன்கொடுத்தோர் கணக்கின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது மீளாய்வாண்டின் மூலதன செலவினையும் மிகைப்படுத்தியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 வகையான அரசிறைக்கடனாளிகள் கணக்கிலிருந்த நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,541,558 மீளாய்வாண்டில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான சந்தைக்கடை வாடகை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய மொத்த அரசிறை அறவீடு, ரூபா 1,756,549 ஆகக் காணப்பட்டபோதிலும் ரூபா 1,676,549 ஆன தொகையே அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் ரூபா 80,000 இற்கான தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சந்தைக்கடை குத்தகை தொடர்பாக நிலுவை அறவீடு ரூபா 172,084 ஆன தொகை கடந்த 03 வருடங்களாக அறவீடு செய்யப்படாமல் நிலுவையாகக் காட்டப்பட்டு வந்திருந்தது.

(ஈ) சபையிலிருந்து இளைப்பாறி, இறந்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களது பதவியினர் கடன் நிலுவை கூட்டு மொத்தம் ரூபா.1,148,646 கடந்த 05 தொடக்கம் 08 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்படட்டிருந்தன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) 1988 (பிரதேச சபைகள்) நிதி, நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| (i) அத்தியாயம் III விதி 33 | மீளாய்வாண்டின் போது சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை. |
| (ii) அத்தியாயம் III விதி 59,60 | மீளாய்வாண்டின் போது வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துவச் சுற்றுநிருப இல DMA/2009 (1) | மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கப்பட்டிருக்க வேண்டு மெனக் குறிப்பிட்டபோதும் அவ்வாறான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்டபின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி 571 | (i) 12 பிடிபண வைப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா.1,236,545 கடந்த 14 தொடக்கம் 36 மாதங்களாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) 05 கேள்வி வைப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா 383,137 கடந்த 12 தொடக்கம் 19 மாதங்களாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.<br><br>(iii) 07 நானாவீத வைப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா 762,539 கடந்த 02 தொடக்கம் 27 மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.<br><br>(iv) 12 வாடகை வைப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா.42,800 கடந்த 12 தொடக்கம் 24 மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிப் பகுப்பாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------

2015 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 29,151,362 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 26,614,087 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 2,537,225 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்கள் மற்றும் மீண்டுவரும் வருமானங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 165,140 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 24,734 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 140,406 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 நிதி மீளாய்வு

### 2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா. 99,132,459 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா. 79,273,926 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா. 19,858,533 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான முகாமைத்துவம்

### 2.4.1 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

17.04.2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய 04 வகையான கட்டணங்களை மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்து கணக்குகளுக்கு எடுக்கப்பட வேண்டிடும். எனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

24 எண்ணிக்கையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அலுவலகப் பணியாளர்களைப் பயன்படுத்தி வருமானப்பரிசோதகர் மற்றும் சந்தை மேற்பார்வையாளர்களுக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா. 47,000,000 பெறுமதியான 11 மூலதன வேலைத்திட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு அறியத்தரப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்றிட்டத் தாமதங்கள்**

மீளாய்வாண்டில் ரூபா.3,938,555 பெறுமதியான 07 செயற்திட்டங்கள் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்.**

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்கள் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை.

**4 கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு**

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 70,170 தொடக்கம் ரூபா 5,229,225 வரையான வேறுபாடுகளும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 100,000 தொடக்கம் ரூபா 3,646,227 வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டிருந்தன.

**5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) உள்ளகக் கணக்காய்வு அலகினை செயற்படுத்தல்

(ii) வருமான சேகரிப்பு

(iii) நிலையான சொத்துக்கள்

(iv) கணக்கீடு

(v) ஆளணி

(vi) நன்கொடை

(vii) நானாவித வைப்புக்கள்

(viii) பாதீட்டுக்கட்டுப்பாடு

(ix) கையிருப்புக் கட்டுப்பாடு

(x) பெறுகை நடைமுறை